பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
12 08 2024 6 45
திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர் - வீராங்கனைகள் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்தியுள்ளதாகவும், நாடே அவர்களின் திறமையைக் கண்டு பெருமிதம் கொள்வதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனமான **Hindenburg** தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் தவறானவை என்று செபி அமைப்பு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை துவங்குவதற்கு முன்பே அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று மாலை லாரியும், காரும் மோதிய விபத்தில் தனியார் கல்லூரியைச் சேர்ந்த 5 மாணவர்கள் உயிரிழந்தனர்.
- பாரீசில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு நிகழ்ச்சியுடன் நிறைவு பெற்றது.

*-- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பாரீசில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர் - வீராங்கனைகள் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்தியுள்ளதாகவும், நாடே அவர்களின் திறமையைக் கண்டு பெருமிதம் கொள்வதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற அனைத்து இந்திய வீரர்களும் தங்களது திறமையை வெளிப்படுத்தியதாகவும், அடுத்து வரக்கூடிய விளையாட்டு நிகழ்ச்சிகளில் வெற்றிபெற தாம் வாழ்த்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் 16 பிரிவுகளில் பங்கேற்பதற்காக 117 பேர் கொண்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

செபி என்று அழைக்கப்படும் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை அமைப்பு, அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல முதலீட்டு ஆராய்ச்சி நிறுவனமான **Hindenburg**–ன் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது.

அதானி குழுமம் நிதி முறைகேட்டில் ஈடுபட்டதாக புகார் எழுந்ததையடுத்து, உச்சநீதிமன்றம் இதனை விசாரிப்பதற்கு செபி அமைப்பை கேட்டுக்கொண்டது.

இந்நிலையில் செபி அமைப்பின் தலைவர் திருமதி மாதாபி புரி புஜ் மற்றும் அவரது கணவர் தவால் புஜ் ஆகியோர் பல்லாயிரக்கணக்கான பங்குகளை வாங்கியிருந்ததாக ஹிண்டன்பர்க் தெரிவித்துள்ளது.

இதனால் அதானி குழுமத்திற்கு எதிராக செபி நிறுவனம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

இதனை மறுத்துள்ள செபி, இம்மாதிரியான குற்றச்சாட்டுகள் தவறானவை என்றும், செபி அமைப்பு இதுபோன்ற நடவடிக்கைகளை கண்காணிக்க ஏற்கனவே குழு ஒன்று உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் செபி அமைப்பின் தலைவர் ஈடுபடக்கூடிய அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் வெளியிடுவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹிண்டன்பர்க் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து முழு விசாரணை நடத்துவதற்கு செபி அமைப்பு தற்போது உத்தரவிட்டுள்ளது.

எனவே முதலீட்டாளர்கள் அமைதி காக்குமாறும், இதுபோன்ற தவறான செய்திகளால் குழப்பமடைய வேண்டாம் என்றும் செபி அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் ஹிண்டன்பர்க் நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும் கூறியுள்ளது.

பங்குச்சந்தை மற்றும் முதலீட்டாளர்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியில் செபி அமைப்பு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் பருவ மழை துவங்குவதற்கு முன்பே அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு விவசாயிகளின் கூட்டு இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற விவசாய திருவிழாவில் அவர் கலந்துகொண்டார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காத அளவுக்கு அனைத்து பகுதிகளிலும் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும், வரும் புதன்கிழமையன்று அனைத்து துறை சார்பில் இதுகுறித்து ஆலோசனை நடைபெற இருப்பதாகவும் அமைச்சர் திரு. நேரு தெரிவித்தார்.

<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராமேஸ்வரம் நகராட்சி மற்றும் மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் அவர் கேட்டறிந்தார்.

அரிச்சல்முனை, தனுஷ்கோடி, குந்துக்கால் உள்ளிட்ட பகுதிகளைப் பார்வையிட்டு சுற்றுலாத்துறை, வனத்துறை, மீன்வளத்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு வசதிகளையும் அவர் பார்வையிட்டார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே சென்னை – திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று மாலை லாரியும், காரும் மோதிய விபத்தில் தனியார் கல்லூரியைச் சேர்ந்த 5 மாணவர்கள் உயிரிழந்தனர்.

ராமஞ்சேரி என்ற இடத்தில் கண்டெய்னர் லாரியும், காரும் நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து நேர்ந்ததாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

விபத்து ஏற்படுத்திய கண்டெய்னர் லாரியை பறிமுதல் செய்து கனகம்மா சத்திரம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தில் உயிரிழந்த மாணவர்கள் 5 பேர் ஆந்திர மாநிலம் ஒங்கோல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் சென்னை அருகேயுள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் 3ஆம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து காரணமாக சென்னை – திருப்பதி நெடுஞ்சாலையில் 2 மணி நேரத்திற்கும் மேலாக கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

<<<<>>>>

மதுரையில் கடந்த நான்கு நாட்களாக நடைபெற்று வந்த மாமதுரை விழாவின் நிறைவுநாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாமதுரை திருவிழாவை கடந்த வியாழக்கிழமையன்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்.

இதனையொட்டி ஒவ்வொரு நாளும் மதுரை மாநகர்ப் பகுதிகளில் பல்வேறு கலாச்சார நிகழ்வுகளும், இலக்கிய சந்திப்புகளும், மாணவ – மாணவிகளுக்கு இடையேயான அறிவுசார் போட்டிகளும், விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழர்களின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் விதமாக ‘வேர்களைத் தேடி’ என்ற பண்பாட்டு பயணத் திட்டம் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

இதன்படி தென்னாப்பிரிக்கா, உகாண்டா, ஃபிஜி, இந்தோனேஷியா உள்ளிட்ட 15 நாடுகளில் இருந்து 100 அயலக தமிழர்கள் இரண்டாம் கட்டமாக தமிழகத்திற்கு அழைத்து வரப்பட்டு தமிழ் மற்றும் தமிழர் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்கு பண்பாட்டுப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக அயலக தமிழர்கள் தென்காசி மாவட்டம் குற்றாலத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்களுக்கு சித்த மருத்துவம், வர்மக்கலை பற்றிய பயிற்சிகள் தரப்பட்டன.

இந்தக் குழுவினர் செங்கல்பட்டு, கடலூர், அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு பயணித்து வரும் 14ஆம் தேதி சென்னை வந்தடைகின்றனர்.

15ஆம் தேதி சென்னையில் தமிழக முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் பங்கேற்கேற்க உள்ளதாக மாநில அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

யுக்ரைன் துருப்புகள் ரஷ்யாவில் 30 கிலோ மீட்டர் தொலைவிற்கு ஊடுருவி சில இடங்கைளக் கைப்பற்றியுள்ளதாக யுக்ரைன் பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் உதவிபுரிந்து வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

‘மக்களுடன் முதல்வர்’ திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல்வேறு வட்டங்களில் நாளை நடைபெறுகிறது. மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

கரூர் அருள்மிகு கல்யாண பசுபதீஸ்வரர் ஆடி திருமண விழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

<<<<>>>>

கொடைக்கானல் மன்னவனூர் பகுதியில் யானைத் தந்தத்தை விற்க முயன்ற 3 பேரை வனத்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

<<<<>>>>

ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் இந்த ஆண்டுக்கான மக்கள் சிந்தனைப் பேரவையின் அறிவியல் மேதை ஜி.டி. நாயுடு விருது, காலிகட் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியின் வேதியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் மு. சங்கரலிங்கத்திற்கு வழங்கப்பட்டது.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பழமைவாய்ந்த ஸ்ரீமுத்தாலம்மன், ஸ்ரீபொன்னியம்மன் ஆலயத்தின் ஆடித் திருவிழா நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

சென்னையில் வரும் 28ஆம் தேதி விபத்தில்லா தினம் கடைபிடிக்கப்படுகிறது. இதற்காக நகரங்களின் முக்கிய சாலை சந்திப்புகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் **Flash Mob** நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூடுதல் காவல்துறை ஆணையர் திரு. சுதாகர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரீசில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் நிறைவு பெற்றன.

நேற்றிரவு நடைபெற்ற வண்ணமிகு நிறைவுநாள் நிகழ்ச்சியில் உலக நாடுகளைச் சேர்ந்த தலைசிறந்த விளையாட்டு பிரபலங்கள் மற்றும் ஹாலிவுட் பிரபலங்களும் கலந்துகொண்டனர்.

மேற்கத்திய இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள், ஆடல் பாடல்களுடன் நடைபெற்றது.

இந்த நிறைவு நிகழ்ச்சியின் போது நடைபெற்ற வீரர்கள் அணிவகுப்பில், இந்தியாவின் தேசியக்கொடியை மனுபாக்கரும், **Sreejesh-**ம் ஏந்திச் சென்றனர்.

இந்தப் போட்டியில் 40 தங்கம், 44 வெள்ளி, 42 வெண்கலம் உட்பட மொத்தம் 126 பதக்கங்களுடன் அமெரிக்கா முதலிடம் பிடித்துள்ளது.

40 தங்கம், 27 வெள்ளி, 24 வெண்கலம் உட்பட மொத்தம் 91 பதக்கங்களுடன் சீனா இரண்டாம் இடத்தையும், 20 தங்கம், 12 வெள்ளி, 13 வெண்கலம் உட்பட 45 பதக்கங்களுடன் ஜப்பான் 3ஆம் இடத்தையும் பிடித்துள்ளது.

இந்தியா ஒரு வெள்ளி, 5 வெண்கலப் பதக்கம் உட்பட மொத்தம் 6 பதக்கங்களுடன் 71வது இடத்தில் உள்ளது.

<<<<>>>>